# SP-யின் SBHC-யின் வசூல்... பெருகும் லஞ்சத் தொகைகள்!

## SP கவனிப்பாரா? லஞ்ச ஒழிப்பு அதிரடி காணுமா?

தஞ்சாவூர் மாவட்டம் மதுக்கூர் காவல் சரகத்திற்கு உட்பட்ட பகுதிகளுக்குள் வரும் பல்வேறு கிராமங்களிலும் சமூக விரோத நடவடிக்கைகளும், அதற்கான தொழில்களும் பெருகிகொண்டே வருகிறது. உதாரணத்திற்கு....

வாட்டாகுடி வடக்கில் குடியிருந்து வரும் மகேந்திரன் என்பவர் சட்டத்திற்கு புறம்பாக கள்ள லாட்டரி மற்றும், கலப்பட மதுபாட்டில்களை விற்றதாக , இவனை திருவாரூர் மாவட்ட போலீஸ் கைது செய்து சிறையில் அடைக்கிறது (பார்க்க தினமலர் நாளிதழ்.) ஆனால் தஞ்சை மாவட்ட போலீஸ் வேடிக்கை பார்க்கிறது என்றும், அதற்கு மதுக்கூர் SP–யின், SBHC செந்தில்குமார்தான் காரணம் என்றும், இந்த மகேந்திரனிடம் மட்டும் வாரம் மாமுலாக, 2,500–மும், மாத மாமுலாக ரூபாய் பத்தாயிரம் லாட்டரிக்கும், இது போக கலப்பட மதுவுக்கு ஒரு பெருந்தொகையினையும் பெற்றுக் கொண்டும் வருகிறார் SBHC செந்தில்குமார்.

இதுபோக, வார மாமுல் தவிர்த்து அவ்வப் போது ஒசியில் பீரும், பிராந்தியும் SBHC செந்தில் குமார், வாங்கிகொள்வதோடு, அந்த பக்கம் மற்றொரு வேலையாக வந்ததாக கூறியும், திடீர் விசிட் செல்கிறபோதும், ரூபாய் 500 வாங்கி கொண்டு செல்வதோடு, இவரை போன்ற சமூக விரோத தொழில் களில் ஈடுபடுவோர்களிடம் எல்லாம் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டு ஒவ்வொரு நபரிடமும், ஒரு பெருந்தொகைகளை மாத, மாதம் பெற்றுக் கொண்டு கனஜோராராக கல்லா கட்டிக்கொண்டு வருகிறார் தஞ்சை SP–ன் SBHC செந்தில்குமார் என்று பதிவு செய்து நமது மூத்த பத்திரிகையாளர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு புகார் அளித்தும் அந்த புகார் மனு மீது இதுவரை எந்தவொரு விசாரணையும் நடத்தப் படவில்லை என்பதற்கான விபரமான பதிவுகள்தான் இது என்றாலும் உரிய ஆதாரத்தோடு பதிவு செய்தும் மகேந்திரனை இதுவரை ஏன் மதுக்கூர் மற்றும் பட்டுக்கோட்டை கலால் போலிசாரால் கைது செய்யப்படவில்லை ? லஞ்சம் வாங்கிய போலிசார் மீதும் ஏன் நடவடிக்கை இல்லை என தஞ்சாவூர் மாவட்ட SP–யின் கனிவான கவனத்திற்கு பதிவு செய்யப்படும் நமது மூத்த பத்திரிகையாளரின் குமுறல்கள்தான் இது.

அதுமட்டுமல்லாது சமூக விரோத நபர்களிடம் லஞ்சம் பெற்று வருவதை பத்திரிகையில் வெளியிட்டமைக்காக SBHC செந்தில்குமார், சமூக விரோத தொழில் நடத்தும் மகேந்திரனை தூண்டி விட்டு செய்தி வெளியிட்ட நமது மூத்த பத்திரிகையாளருக்கு கொலை மிரட்டல் விடுவதும், மிக அவதூறான, அருவருக்கதக்க செய்திகளை கூறி வம்பு வரவழைப்பது தொடர்பான முயற்சிகளை செய்தும் வருகிறார்.

அதாவது சமூக விரோத தொழில்களை நடத்தி வரும் மகேந்திரன் மீதும், அவரிடம் லஞ்சம் வாங்கிய SBHC செந்தில்குமார் மீதும், காவல் உயர் அதிகாரிகளுக்கு புகாரை கொடுத்த போதும் நமது மூத்த பத்திரிகையாளரை அழைத்து விசாரணை செய்யப்பட வேண்டிய, உயர் காவல்துறை அதிகாரிகளால் இதுவரை உரிய விசாரணையும் செய்து எந்தவித நடவடிக்கைகளும் எடுக்கப்படாதது ஏன் எனவும், அப்படியானால் இதுவரை இவர்கள் மீது கொடுத்த புகார்கள் எல்லாம் மாவட்ட SP–யின் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்படாமல் உள்ளதா என்ற சந்தேக கேள்விகளை எழுப்பு கிறார் நமது மூத்த பத்திரிகையாளர்.

மேலும், இது சம்பந்தமாக நமது மூத்த பத்திரிகையாளர் மதுக்கூர் காவல் ஆய்வாளரிடம் பேசி விபரம் கேட்டபோது ‘‘கடந்த பத்து நாட் களாகவே தனக்கு வேலைப்பளு அதிகம் என்றும், இதுபற்றி எதுவும் என் கவனத்திற்கு வந்ததாக நினைவில் இல்லை என்றாலும் ஒரு

கலப்பட மது, கள்ள லாட்டரி விற்பனையாளர் மகேந்திரன்



அரை மணிநேரம் கழித்து இது பற்றி விபரம் அறிந்து பேசுகிறேன் என்று கூறிய மதுக்கூர் காவல் ஆய்வாளர் இந்த பதிவு வெளியிடும் வரை ஆய்வாளரோ அல்லது அவரது தரப்பில் இருந்து உதவி ஆய்வாளர்களோ எவருமே நமது லைனிற்கு வரவும் இல்லை, மகேந்திரன் கைது செய்யப்படவும் இல்லை.

அதேபோல்,வாட்டாகுடியில் இருந்து நமது மூத்த பத்திரிகையாளரின் ஒட்டுனர் சென்னைக்கு கிளம்புகிறபோது வேண்டு மென்றே வாட்டாகுடி, கோபியின் தூண்டுதலின்பேரில், கோபியின் மாப்பிள்ளையான, வெற்றிவேல் மூலம் வம்பிழுத்து, அந்த ஒட்டுனரான அரவிந்தன் என்பவரது பைக்கையும், துணி பேக்கையும் வழிபறி செய்ததோடு, அரவிந்தனை பஸ் நிலையத்தில் இறக்கி விட சென்ற சதிஷ் என்பவரையும், சேர்த்து இருவரையும் கொலை வெறி தாக்குதல் நடத்தியுள்ளனர் வாட்டாகுடி கிராமத்தை சேர்ந்த அடையாளம் தெரிந்த பலர்.

இது பற்றிய ஒரு புகார் மனு அரவிந்தனாலும், நமது மூத்த பத்திரிகையாளராலும் கொடுக்கப்பட்ட மனு மதுக்கூர் காவல் நிலையத்தில் நிலுவையில் உள்ளது.

இது சம்பந்தமாக விசாரணைக்கு ஆஜராக கோரி 91CrPc மற்றும் 160 CrPc படியான அழைப்பாணையை சம்பந்தப்பட்டவர்களே அழைப்பு விடுவிக்க கோரியும், இதுவரை காவல் நிலைய அதிகாரிகளால் அழைப்பாணை அனுப்பப் படாமல் உள்ளது. ஏனென்றால் மதுக்கூர் காவல் நிலையத்தில் உள்ள அரவிந்தனின் புகாரிலும் SBHC செந்தில்குமார் மீது புகார் கூறப்பட்டுள்ள தால், இதனால் வெறுப்பு கொண்டுள்ளார் SBHC செந்தில்குமார்.

அதனால் அந்த புகாருக்கான நடவடிக்கை யினை எடுக்க கோருகிறபட்சத்தில் நமது மூத்த பத்திரிகையாளரும், ஒட்டுனர் அரவிந்தனும் நேரிடையாக காவல் நிலையம் சென்றாலும் கூட, நாங்கள் ரோந்து சென்றுகொண்டிருந்த போது சந்தேகத்திற்கு இடமாக இவர்கள் இருவரும் இருந்ததால் விசாரணைக்காக காவல் நிலையம் அழைத்து வரப்பட்டு விசாரிக்கின்ற போது என கூறி இல்லாத, பொல்லாத குற்றச்சாட்டுகளை கூறி அவரது அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்து, நமது மூத்த பத்திரிகையாளர் மீது பொய்யான வழக்கை பதிவு செய்வதற்கு SBHC–யின் தூண்டுதலின்பேரில் சில பொய் சாட்சிகளை உருவாக்கி லாட்டரி மற்றும் கலப்பட மது விற்பனையாளரான மகேந்திரனாலும், மற்றும் சில காவல்துறையினை சேர்ந்தவர்களாலும் பொய் வழக்கு புனையப்பட இருக்கும் சூழ்நிலைகளை



திருவாரூர் அருகே வாகன சோதனை

# ஆன்லைன் லாட்டரி விற்பனையாளர் கைது

## பணம், செல்போன் பறிமுதல்

மன்னார்குடி, ஜன.26: திருவாரூர் அருகே வாகன சோதனையின்போது ஆன்லைன் லாட்டரி விற்பனையாளரை போலீசார் கைது செய்தனர்.

திருவாரூர் மாவட்டம் பெருகவாழ்ந்தான் கடைவீதியில் எஸ்எஸ்ஐ. சங்கர் தலைமையில் தனிப்படை போலீசார் நேற்று மதியம் தீவிர வாகன சோதனையில் ஈடுபட்டனர். அப்போது அவ்வழியே வந்த பைக்கை சந்தேகத்தின் பேரில் மடக்கி விசாரித்ததில், பைக்கில் வந்த நபர் முன்னுக்கு பின் முரணாக பேசியதால் சந்தேகமடைந்த போலீசார் அவரை பெருகவாழ்ந்தான் காவல் நிலையத்திற்கு கொண்டு சென்றனர். அங்கு அவரிடம் போலீசார் இடுக்கிப்பிடி விசாரணை மேற்கொண்டனர்.

தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டை அடுத்த வாட்டாக்குடி வடக்கு கிராமத்தை சேர்ந்த மகேந்திரன்(42) என்பதும், இவர் பல்வேறு வாட்ஸ் அப் குழுக்களை உருவாக்கி, அதன் மூலம் அரசால் தடை செய்யப்பட்ட லாட்டரி விற்பனையில் ஈடுபட்டு வந்ததும் தெரிய வந்தது. இதுகுறித்து போலீசார் வழக்குப்பதிவு செய்து மகேந்திரனை கைது செய்து அவரிடமிருந்து ரூ.31,740 ரொக்க பணம், செல்போன் மற்றும் பைக் பறிமுதல் செய்தனர்.

மகேந்திரன்

தினமலர் நாளிதழில் வெளிவந்த
திருவாரூர் போலீஸ் மகேந்திரனை கைது செய்த செய்தி

லாட்டரி மற்றும் கலப்படமது விற்பனையாளரான மகேந்திரனின் மிரட்டல் ஆடியோவில் அவன் உளறினாலும், அவனது தரப்பில் இருந்தும், மதுக்கூர் காவலில் இருந்து நேர்மையான காவலர்கள் தரப்பிலும் சிலரால் நமது மூத்த பத்திரிகையாளக்கு அறிவுறுத்தப்பட்ட செய்தி களும், அவருக்கு எச்சரிக்கையாக அமையப் பெற்றது என்றாலும் தற்போது தொலைதூர பயணத் திற்கு அவரது உடல் நலனும் ஒத்துழைக்காததால் இவர்களால் மதுக்கூர் காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்ட புகார்கள் குறித்த நடவடிக்கைக் கான விசாரணைகளும் சற்று தள்ளிக் கொண்டே போகிறது.

இருந்தாலும் சட்டரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளப்பட நமது மூத்த பத்திரிகையாளரால் கோரப்பட்டு வருகிறது என்றாலும், காவல் அதிகாரிகளின் கவனத்திற்கு ஒன்றை நினைவு படுத்திக்கொள்கிறோம்.

கடந்த சில வருடங்களுக்கு முன்பு மதுக்கூர் காவல் நிலைய பெண் ஆய்வாளர் ஒருவர் முக்கூட்டு சாலையில் சீருடையில் நின்று பணி புரிந்த நிலையில் இதே வாட்டாகுடி கிராமத்தை சேர்ந்த பலராலும், அவரது சீருடை கிழிக்கப்பட்டு, அவரை மானபங்கப்படுத்திய அதே நபர்களால் தான் தற்போது நமது மூத்த பத்திரிகையாளரின் ஒட்டுனர் அரவிந்தன் தாக்கப்பட்டுள்ளார் என்பதையும் நினைவுபடுத்திக்கொள்கிறோம்.

இப்படி நியாயம் தவறி செயல்படும் இந்த கிராமத்தினருக்கு, SP–யின் SBHC–செந்தில் குமாரின் முழு ஆதரவும் இப்போதுவரை தொடர்ந்து வருவதும், ஒரு தனி புகார் என்றாலும், இது சம்பந்தமாகவும் நமது மூத்த பத்திரிகையாளர்


அரசியல் ஒற்றன்

Volume : 15 • மே 2022 - ரூ. 10 • Issue : 1

தஞ்சாவூர்

மதுக்கூர் காவலின் அவலம்...

முதல்வர் - டி.ஜி.பி. - எஸ்.பி. பார்வைக்கு!

அரசியல் ஒற்றன் பத்திரிகையில் மகேந்திரனைப் பற்றி நமது மூத்த பத்திரிகையாளரால் போடப்பட்ட செய்தி

மதுக்கூர் காவல் ஆய்வாளர் கவனத்திற்கு தபால் மூலம் பல புகார்களும், அதே போல், SP—க்கும் மின்னஞ்சல் மற்றும் தபால் மூலமாகவும் புகார்களை தெரிவித்துள்ளார்.

ஆனால் இவை எல்லாம் மதுக்கூர் காவல் ஆய்வாளர் கவனத்திற்கு வந்ததாக தெரியவில்லை என்ற பதிலையே மதுக்கூர் காவல் ஆய்வாளர் தெரிவிக்கிறார் என்றால் எப்படி? அப்படியானால் மதுக்கூர் காவல் நிலையத்தில் ஆய்வாளர் கவனத்திற்கு செல்ல வேண்டிய தபால், மற்றும் மின்னஞ்சல் மூலமாக அனுப்பப்படும் புகார்கள் எல்லாம் ஆய்வாளர் கவனத்திற்கு செல்லாமல் யாரால் மறைக்கப்படுகிறது? என்பதும் ஆய்வு செய்யப்பட வேண்டிய விஷயமாகும். ஒரு வேளை இதுவும் SBHC செந்தில்குமாரின் கைங்கர்யமோ?

இப்படி ஒரு சமூக விரோத செயல்கள் பற்றிய செய்தியினை நமது மூத்த பத்திரிகையாளர் மாவட்ட SP—க்கே தனது முகவரியோடு புகார் மனு அளித்தும் செய்திகளை வெளியிட்டும் வந்ததற்கு இதுவரை மகேந்திரன் மீது எந்த ஒரு வழக்கும் சம்பந்தப்பட்ட காவல் அதிகாரிகளால் இதுவரை பதிவு செய்யப்படவில்லை. அதே நேரத்தில் அந்த பத்திரிகையாளரால் மகேந்திரன் மீது கொடுக்கப்பட்ட புகார் சம்பந்தமான குற்றச்சாட்டுகளை பொய் என்று சொல்வதற்குத்தான் முடியுமா?

அதேபோல், மதுக்கூர் காவல் மற்றும் பட்டுக் கோட்டை கலால் போலிசாராலும் மற்றும் இந்த வாட்டாகுடியின் ஊராட்சி மன்ற தலைவராலும், வாட்டாகுடி கிராமத்தினாரலும்தான் மகேந்திரனுக்கு Good என்ற நற்சான்றிதழை வழங்கத்தான் முடியுமா? அல்லது இவனது கலப்பட மதுபான சரக்குகளையும், கள்ள லாட்டரியினையும் சமூக விரோத தொழில்கள் எதையும் செய்யவில்லை என மதுக்கூர் காவல் நிலைய அதிகாரிகளாலும்,வாட்டாகுடி கிராமத்தினராலும் தான் இல்லை என்றும், இது ஒரு பொய்யான குற்றச்சாட்டு என்றுதான் கூற முடியுமா? அதுமட்டுமல்லாது மகேந்திரனுக்கு ஒரு நற்சான்றிதழ்களை அளிக்ககூடிய வகையில் மகேந்திரனுக்கு சாதகமான ஒரு பதிலைத்தான் இவர்கள் அனைவராலும் சொல்லத்தான் முடியுமா? என்ற கேள்விகளை உரக்கத்தான் கேட்கிறார் நமது மூத்த பத்திரிகையாளர்.

மேலும், மகேந்திரனே நமது மூத்த பத்திரிகை யாளரிடம் பேசிய மிரட்டல் ஆடியோவில் அவனே மதுபாட்டில்கள் மற்றும், லாட்டரிகளை தற்போது அதிகமாக விற்று வருவதாக என பேசும் ஆடியோவை ஆதாரமாக கூட வெளியிட்டும், மகேந்திரனிடம் கை நீட்டிய காக்கியின் லஞ்சலாவண்யங்கள் இதன் மூலம் வெளிப்பட்ட பின்பும் கூட மகேந்திரன் மீது உரிய நடவடிக்கை இல்லை என்கிற போது SP கவனத்திற்கு சொல்லப்பட வேண்டிய அனைத்து தகவல்களும் மற்றும் மதுக்கூர் காவல் ஆய்வாளர் கவனத்திற்கும் சொல்லப் படுகிற தகவல்கள் அனைத்தும் பொய் என்பதை SP யும், மதுக்கூர் காவல் ஆய்வாளரும் எப்படி அறியப்போகிறார் என சில அதிரடியான நேர்மையான மதுக்கூர் போலி சாராலும் மற்றும் தஞ்சை மாவட்டத்தில் உள்ள மற்ற காவல் நிலையங்களில் உள்ள SBHC—க்களாலும் கேள்விகள் எழுப்பப்பட்டும் பேசப்பட்டும் வருவதையும் என்னவென்று சொல்வது.

அதேநேரத்தில் கலால் போலீசார் மட்டும் மகேந்திரனை அழைத்து விசாரித்துள்ளனர் அந்த விசாரணையில் ‘‘ஏனய்யா இப்படியிருக்க... அந்த பத்திரிகையாளரை எப்படியாவது வம்பிழுத்து அடித்து உதைத்து (மதுக்கூர்) லோக்கல் ஸ்டேஷனுக்கு அவன் வரும் நிலையை ஏற்படுத்துங்கள் மற்றதை மதுக்கூர் போலீசார் பார்த்துக்கொள்வார்கள் என கூறி அனுப்பிய சில காவலர்களால் மட்டும்தான், மகேந்திரனின் மேற்கண்ட மிரட்டல் ஆடியோவே தற்போது ஆதாரத் தோடு நமது மூத்த பத்திரிகையாளரால் வெளியிடப் பட்டுள்ளது.

(இதற்காகத்தான் நமது மூத்த பத்திரிகையாளரால் 91CrPC மற்றும் 160 CrPc படியான அழைப்பாணையை

கோருகிறார் புரிய வேண்டியவர்களுக்கு இப்போது புரிய வரலாம்).

மேலும், இது சம்பந்தமாக மகேந்திரனை நேரில் வரவழைத்த போலீசார் சட்டத்திற்கு புறம்பான 'அந்த' மாதிரியான தொழில்களை எதுவும்தான்" (மகேந்திரன்) செய்யவில்லை என்றும், நமது மூத்த பத்திரிகையாளர் கொடுத்த புகார் மனு தவறு என்றும் மகேந்திரனிடம் எழுதி வாங்கிகொண்டு விடுவித்ததற்கான தகவல்களும் அந்தப் பகுதியில் இருந்து மகேந்திரன் தரப்பில் இருந்தே நமக்கு கூறப்பட்டும் வருகிறது. இதனை இல்லையென்று பட்டுக்கோட்டைகலால் போலிசாரால் மறுக்க முடியுமா ?

(இதற்கும் ஆதாரமாக இவர்களது ஆடியோ இணைப்பில் பார்க்க).

ஆக, நமது மூத்த பத்திரிகையாளரால் ஆதாரத் தோடு, மகேந்திரனின் மிரட்டல் பேச்சோடு, 'தான் இப்போதும் கலப்பட மதுபானத்தை அதிகமாக விற்கிறேன் என மகேந்திரனே கூறிய ஆடியோ வெளிவந்தபின்பும் கலால் போலிசாரால் ஏன் மகேந்திரன் மீது வழக்கு போடாமல் உள்ளனர்.

விசாரணைக்காக 'கலால்' காவல் நிலையத்தில் ஆஜரான மகேந்திரனிடம் இருந்து கரன்சிகளை லஞ்சமாக பெற்றுக்கொண்டதால் தானே அன்று மகேந்திரன் கைது செய்யப்படாமல் விடப்பட்டுள்ளார் ? மகேந்திரனின் கைது 'கலால்' அதிகாரிகளால் எப்படி எதற்காக தவிர்க்கப்பட்டது ? இன்றுவரை அவனது கைதும் எதற்காக தவிர்க்கப்படுகிறது. இவை எல்லாம் எப்படி SP கவனத்திற்கு தெரியப்படாமல் உள்ளது ? அல்லது SPக்கு எடுத்துச் சொல்லப்படுகிற தகவல்கள் எல்லாம் தவறாக கூறப்படுகிறதா ? எப்படி, இப்படி மகேந்திரனிடம் எழுதி வாங்கிகொண்டு கலால் போலீசார் விடுவித்தனர் ? இதில் பட்டவர்த்தமாக லஞ்சம் கைமாறியிருப்பது என்பது எப்படி SP கவனத்திற்கு செல்லாமல் உள்ளது ? மகேந்திரனை விசாரிப்பது போல் விசாரித்து, அவனிடம் நியாயவாதியாக எழுதி வாங்கியபடி மகேந்திரனை விடுவித்த போலிசார் மீதும் இதுவரை SP – நடவடிக்கை எடுக்காமல் இருப்பதும் மாவட்ட காவல்துறைக்கு களங்கம் அல்லவா ? இதனை விஜிலென்ஸ் அதிகாரிகள் ஆய்வுக்கு எடுத்துக் கொள்வதே சாலச்சிறந்தது.

இப்படி, இது சம்பந்தமாக சில காக்கிகளை கரன்சி யில் குளிப்பாட்டி விட்டு, கைகுலுக்கிவிட்டு வெளிவந்த மகேந்திரனிடம், அந்த பத்திரிகைகாரனை இதுவரைக்கும் கொண்டு வந்துவிடலமா ? அவனை ஏன் இன்னமும் விட்டுவிட்டு நிற்கிறீர்கள், அடித்து கால் கையை உடைத்து உங்களது பயத்தை காட்டி வைத்திருக்க வேண்டாமா ? என மகேந்திரனிடம் உசுப்பேத்தியும் வருகின்றனர் சம்பந்தப்பட்ட மதுக்கூர் மற்றும் பட்டுக்கோட்டை கலால் காக்கிகள்

இப்படி கடந்த வாரம் காவல்துறையினரிடம் எழுதி கொடுத்துவிட்டு, காலரை தூக்கி விட்டு வெளியே வந்த



கிராமங்களை உள்ளடக்கிய மாவட்டமாகும். பக்கத்து மாவட்டமான திருவாரூர் மாவட்டம்தான் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் சொந்த மாவட்டமாகும் அப்படியுள்ள திருவாரூர் மாவட்ட மக்களே மூக்கில் விரல் வைத்து ஆச்சர்யபடும் அளவுக்கு, தஞ்சை மாவட்டத் தில் உள்ள கிராம மக்களும், அங்குள்ள இளைஞர்களும், வளர் பெரியவர்களும் கூட தங்கள் குழந்தைகளுக்கும், தொழில்நிறுவனத்திற்கும், கலைஞரின் குடும்பத்தில் உள்ளவர்களின் பெயரை சூட்டி மகிழ்வோர்கள் என்பதே அனைவரையும் வியக்கவைக்கும் அதிசயங்களில் ஒன்றாகும்.

இந்த சூழ்நிலையில் தஞ்சையை சுற்றியுள்ள கிராமங் களில் முழுக்க, இளைஞர்களின் நேர்வழிக்கான பாதைகளை திசை திருப்பும் வகையிலும், சட்டவிரோத செயல்களை மேலாங்க செய்து, ஆங்காங்கே முளைத்து வரும் மகேந்திரனைகளை உருவாக்கி வருகிறது சில காவல் நிலையங்கள்.

எனவே சமூக விரோத செயல்களை செய்துவரும் நபர்களோடு கைகோர்க்கும் காவல் துறையினரை களை யெடுக்க வேண்டும் என வாட்டாகுடி கிராமத்தை சேர்ந்தவர்களே, தங்களது முழு முகவரியுடன், SBHC காவலர் செந்தில்குமார் மீதும், லாட்டரி மற்றும் மது விற்பனையாள ரான மகேந்திரன் மீதும் புகார் கொடுத்தும், உரிய நடவடிக்கை கள் மட்டும் ஊர்ந்து செல்கிறது என்கின்றனர். ஆகவே தஞ்சா வூர் மாவட்ட காவலின் நிலை களை மாண்புமிகு முதல்வர் தான், தனது நேரடிப் பார்வை களை வீச வேண்டும் என கோரிக்கை வைக்கின்றனர் டெல்டா பகுதியினர்.

நாடு முன்னேற கிராமத்தின் வளர்ச்சி தான் முக்கிய பங்கு என்பதை நாம் சொல்லி யாரும் தெரிய வேண்டியதில்லை. என்னதான் நடக்கும் என்பதை பொறுத் திருந்து பார்ப்போம். – நெல்லை கோபால்

மே 2022 அரசியல் ஒற்றன் 29

**மகேந்திரனின் மிரட்டல் பேச்சோடு, தான் இப்போதும் கலப்பட மதுபானத்தை அதிகமாக விற்கிறேன் என மகேந்திரனே கூறிய ஆடியோ வெளிவந்த பின்பும் கலால் போலீசார் மற்றும் மதுக்கூர் போலீசார் ஏன் மகேந்திரன் மீது வழக்கு போடாமல் உள்ளனர்? எல்லாம் லஞ்ச மயமோ?**



SBHC
செந்தில்குமார்
ஏட்டு
(மதுக்கூர்
காவல்)

மகேந்திரன், அன்றை இரவே வாட்டாகுடியில் புல் போதை ஏற்றிவிட்டு, நமது மூத்த பத்திரிகையாளரை போனில் அழைத்து மிகமிக மோசமாக அவரையும், அவரது குடும்பத்தாரை பற்றி கேவலமாக பேசி கடுமையாக மிரட்டியும் வந்துள்ளார்.

இப்படி மிரட்டிய நிலையில் இருந்த மகேந்திரனுக்கு கூட இருந்த ரெங்கராஜ், வெங்கடேசன் சபரி என்ற ஐய்யப்பன், மற்றும் சிலரும் மகேந்திரனை தூண்டியபடி, காக்கிகள் எங்கள் 'காலின் கக்கத்திற்குள்' (இடுக்கில்) என சொல்லாமல் சொல்லி சிரிப்பொலி எழுப்பி, மகேந்திரனை ஊக்கு வித்து, நமது மூத்த பத்திரிகையாளருக்கு கொலை மிரட்டல்களையும் விடுத்துள்ளனர் அந்த மூவரோடு சேர்ந்து மற்றும் சிலர்.

(ஆதாரம்– இவர்கள் பேசிய ஆடியோ)

அந்த வகையில் நமது மூத்த பத்திரிகையாளரின் கைப்பேசியில் ரிக்கார்டு செய்யப்பட்டவைகள் அனைத்தும் மிக மோசமாக இருந்த காரணத்தினால் மட்டுமே பொது தளத்தில் அந்த மாதிரியான பதிவுகளை நாகரீகம் கருதி வெளியீடாமல் நாம் முடக்கியதோடு, உயர் காவல் அதிகாரிகள் வரை அறிய வேண்டிய பதிவுகளை மட்டும் இந்த இணைப்பில் உள்ள ஆடியோவின் மூலமாக உயர் காவல்

அதிகாரிகளின் கவனத்திற்கு நேரிடையாக கொண்டு சென்று உரிய நடவடிக்கைக்காக இப்போது புகார் கொடுக்கப்பட்டுள்ளது .

அதேபோல் மகேந்திரனின் அந்த அநாகரிகமான பேச்சுக்கள் மற்றும் மிரட்டல் பேச்சுக்கள் அனைத்தும் உரிய அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு சென்று உரிய வழக்குபதிவு செய்யவும் பத்திரிகைதுறையின் JEPAR சங்கத்தின் சார்பாக தஞ்சை மாவட்ட ஆட்சியர், மற்றும் காவல் கண்காணிப்பாளர் அவர்களின் உரிய நடவடிக்கைக்காக பணிந்து முன்வைக்கிறோம். மேலும் இவனும், இவனது கூட்டாளிகளான அந்த கிராமத்தை சேர்ந்த சிலராலும், கைபேசியில் கொலை மிரட்டல் விடுவதும் அருவருக்கதக்க பொய்யான தகவல்களை பேசி குடும்பத்தில் குழப்பத்தை விளைவிப்பதும் எரிச்சல் மூட்டும் வகையிலும், மன உளைச்சல் ஏற்படும் வகையில் பேசி, இதனால் கோபம் கொண்டு நமது மூத்த பத்திரிகையாளர் அவனிடத்திற்கு செல்வதற்காகவும், அவரை வரவழைத்து, தாக்கவும், அதே நேரத்தில் மகேந்திரனிடம் பொய்யான புகாரை பெற்று மதுக்கூர் காவலர்களால் நமது மூத்த பத்திரிகை யாளரை முடக்கி


இறையன்பு ஐ.ஏ.எஸ்.


பிரபாகரன் ஐ.ஏ.எஸ்.

காவலர்களால் தாக்கப்படுவதற்காகவும் தான், மதுக்கூர் SBHC காவலர் செந்தில்குமாரின் தூண்டுதலின்படி முறையற்ற அநாகரிமான தரமற்ற அந்த பேச்சுகள் மூலம் மிரட்டியுள்ளது என்பதை இந்த மகேந்திரன் பேசிய ஆடியோ பதிவே நீருபிக்கிற ஆதரமாக அமைந்துள்ளது.

(ஆதாரம்–ஆடியோ இணைப்பு)

அதே போல் மதுக்கூர் காவலில் உள்ள நேர்மையான காவலர்களாலும் மற்றும்,வாட்டாகுடி பகுதியில் உள்ள பலராலும் நம்மிடம் பதிவு செய்யப்பட்டு வந்தது இதுதான்.

அதாவது, மகேந்திரனிடம் இருந்து பெறப்படும் லஞ்ச தொகைகள் காரணமாக மகேந்திரன் மீது மதுக்கூர் மற்றும் பட்டுக்கோட்டை கலால்,காவல்நிலையத்தினரால் எந்தவித நடவடிக்கையும் இதுவரை எடுக்கப்படவில்லை என்பதும், இனியும் எந்த வித நடவடிக்கைகளும் எடுக்கப் படாமல் இருப்பதற்கான என்னென்ன வழிகள் இருக்குமோ அதனை எல்லாம் இந்த காவல்துறை யினரால் ஏற்பாடுகள் செய்யப்படும் என்றும், நமது மூத்த பத்திரிகையாளர் மீது ஜமீனில் வெளிவராத படியான வழக்குகள் மற்றும் பொய்யான கஞ்சா வழக்குகளையும் புனைவதற்குரிய அனைத்து ஏற்பாடுகளையும் SP–யின் SBHC–யின் மூலமாக மகேந்திரனிடம் அறிவுறுத்தப்பட்டு வருவதால் எப்போது வேண்டுமானாலும் நமது மூத்த பத்திரிகை யாளரால் கூறப்பட்ட மகேந்திரன் புகாரில் உள்ள நபர்களாலும் மற்றும் அரவிந்தனின் புகாரில் கூறப்பட்ட சிலராலும் நமது மூத்த பத்திரிகையாளர் தாக்கப்படலாம் அல்லது மதுக்கூர் போலிசாரால் பொய் வழக்குகளும் பதியப்படலாம் என்கிற நிலைகள் தான் தற்போது தெரியவருகிறது.

எந்தவொரு வழக்குகளையும் சட்ட ரீதியாக சந்திக்க எந்த பத்திரிகையாளர் களும் தயங்குவதில்லை என்பதோடு, எதையும் போராடி வெல்வதிலும், பொய் வழக்கு பதிவோர்க்கு எதிராக, உரிய சட்ட ரீதியான வழக்குகளையும், அவர்கள் மீது தொடுத்து, அவர்களது அதிகார துஷ்பிர யோகத்தை முறைகேடாக பயன்படுத்தியதை நிரூபித்து அந்த அரசு அதிகாரிகள் பணியை இழப்பதற்கான நடவடிக்கைகளையும் எடுப் பதற்கு பொய் வழக்குகளை சந்திக்கும் பத்திரிகையாளர்களுக்கு நிகர் அவர்களே என்பதுதான் உண்மை.இது ஒரு புறம் இருந்தாலும்

எந்த வித விபரீதங்களும் தொடராதபடி விஜிலென்ஸ் போலிசாரால்,உடனடி ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு SBHC–யிடம் உரிய விசாரணை செய்யப்பட்டு, தஞ்சை மாவட்டத்தில் நடக்கும் சமூக விரோத குற்றங்கள் அனைத்திற்கும் பெறப்படும் லஞ்சங்கள் தடுக்கப்படுவதோடு, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவரது நேரடி கண்காணிப்பின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட வேண்டிய அனைத்து தகவல் களும் முறையாக கொண்டு செல்லப்படவும் உரிய வழிவகைகளை செய்ய வேண்டும். மேலும் SP–க்கு தமிழ் முழுக்க தெரியா தாதே இதுபோன்ற ஊழல் காவலர்களுக்கு உரமாய் உயர்ந்து நிற்கிறது என்பதோடு அவரை சுற்றி நிற்கிற சில அதிகாரிகளின் நம்பகதன்மைகளும் ஆய்வுக்குப்படுத்தப் படுவதாகவே அமைகிறது என்பதுதான் உண்மை.

அது மட்டுமல்லாது, காவல் நிலைய அதிகாரிகளால் ஆய்வுகளில் பறிக்கப்படும் போதை வஸ்துகளை உடனே அந்த காவல் நிலையத்தில் இருந்து சம்பந்தப்பட்ட

Narcotics துறைக்கு உடனே அப்புறப் படுத்தப்பட வேண்டும். அப்படி அப்புறப் படுத்தாத போதைவஸ்துகள் காவல் நிலையத்தில் இருப்பு வைக்கப்பட்டிருப்ப தால்தான் ஊழலை வெளிப்படுத்துவோர் மீதும் மற்றும் காவல்துறையினருக்கு வரும் லஞ்ச வருமானத்தை தடுப்போர்க்கும் அவர்களை எதிர்ப்பவருக்கும், பெரிய தனக்காரர்களை பகைப்பவர்கள் மீதும் பொய் வழக்குகளை பதிவதற்கான அந்த கஞ்சா போன்ற போதை வஸ்துகளை முறையற்ற வகையில் காவல் துறையினர் மட்டும் உபயோகித்து வருகின்றனர் என்பதால் அரசும், மாவட்ட காவல் மற்றும் மாவட்ட ஆட்சியரின் நிர்வாகமும், மாவட்ட நீதியரசர்களும் காவல் நிலையங்களில் திடீர் ஆய்வுகளை மேற்கொண்டு, தேவையில்லாமல் ஸ்டாக் வைத்திருக்கும் போதை வஸ்துகளை கண்டறிந்து உடனே அந்தந்த காவல் நிலையத்தில் இருந்து ஏன் இவர்கள் அப்புறப்படுத்தப்படவில்லை என்பதை அறிந்து, அதனை காவல் நிலையத்தில் ஸ்டாக் வைத்த குற்றத்திற்காக அந்தந்த காவல் நிலைய அதிகாரிகள் மீதும் இந்த போதைவஸ்துக்குரிய வழக்கினை பதிவு செய்து அந்த அதிகாரி மீதும் உரிய நடவடிக்கைகளையும் மேற்கொள்ளபட வேண்டும் என்பதையும் நாம் பணிந்து கேட்டுக் கொள்கிறோம்.


பாலகிருஷ்ணன் ஐஜி


ரவளிபிரியா ஐ.பி.எஸ்.


தினேஷ் பொன்ராஜ் ஐ.ஏ.எஸ்

இப்படியொரு நிலைமாறுகிற பட்சத்தில் மட்டும் தான், தஞ்சை மாவட்டத்தை சுற்றியுள்ள கிராமங் களின் வளர்ச்சிகளும் முன்னேற்ற பாதைகளுக் குள் செல்வதோடு, தேவையில்லா சட்ட ஒழுங்கு பிரச்சனைகளும் ஏற்படாமல் பொய் வழக்குகளும் பதியப்படாமல் தடுக்கப்படும் என்பதே நிதர்சனமான உண்மையாகும்.

அதே போல் திருட்டு லாட்டரியும், கலப்பட 'மது'வினை விற்று வரும் மகேந்திரனின், சமூக விரோத தொழிலை அடையாளம் காட்டி, செய்தி களை வெளியிட்ட நமது மூத்த பத்திரிகையாளரை யும் கடந்த 17–05–2022–ல் இருந்து தற்போதுவரை கைப்பேசியில் மிரட்டல் விடுத்த மகேந்திரனின் பேச்சில், தனது லாட்டரி மற்றும் கலப்படமது தொழி லும் தற்போதும் அமோகமாக நடைபெறுவதையும் அவரே ஒப்புக்கொள்ளும் ஆடியோவும் சம்பந்தப் பட்ட அதிகாரிகளின் லஞ்ச லாவண்ய நடவடிக் கைக்கு ஒரு சாட்சியாகவும், காவல் அதிகாரி களுக்கு விடுப்பட்ட ஒரு சேலஞ்ச் – ஆகத்தான் உள்ளது என்பதை காட்டுகிறது.

எனவே இந்த ஆடியோ சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்திற்கு சென்று முழுவதமாக ஒருவாரமாகியும் மகேந்திரன் மீது எந்த ஒரு வழக்கும் பதியப்படவில்லை அவனது தொழில் இன்னும் கனஜோராக நடந்து வருவதை என்ன வென்று சொல்வது? அதிரடியான, நேர்மையான மாவட்ட காவல் SPக்கும், காவல்துறை தலைவர் சென்ட்ரல்–அவர்களது கவனத்திற்கும் கொண்டு செல்லப்பட வேண்டிய தகவல்கள் முழுக்க... முழுக்க தடுப்பதால் மட்டும்தான், இது போன்ற சமூக விரோத குண்டர்களின் பேச்சுக்கள் பொது தளத்திற்குள் வெளியேறி காவல்துறைக்கு ஒரு தலைக்குனிவை ஏற்படுத்துகிறது. எனவே உள்துறை செயலர் எடுக்கும் அதிரடியான நடவடிக்கைகளால் மட்டும்தான் இது போன்ற களங்கங்கள் ஏற்படாமல் தடுக்கப்படும்.

இப்படி மாவட்ட SPக்கும், மதுக்கூர் காவல் துறைக்கும், களங்கத்தை ஏற்படுத்தும் அளவிற்கு மகேந்திரனோடு, சேர்ந்து சிரித்த அந்த மூன்று பேரோடு மற்றும் இவனோடு இருந்த சிலரது நையாண்டியின் சிரிப்புகளை என்ன சொல்லுவது? இந்த 'கேலி'த்தனமான சிரிப்புகளை சம்பந்தப்பட்ட காவல் நிலைய அதிகாரிகள் புரிந்துகொள்கிறார் களோ இல்லையோ, புரியவேண்டிய அதிரடியான நேர்மையான SP–யும், ஐஜி அவர்களும், புரிந்து மகேந்திரனின் மீது குண்டாஸ் வழக்கு பதிவதோடு, காவல்துறைக்கு களங்கம் ஏற்படுத்திய மகேந்திரனின் பேச்சுக்கு 'கோரஸாக' சிரிப்பொலி எழுப்பியவர்களான, ரங்கராஜ், வெங்டேஷன் சபரி என்ற ஐயப்பன் மற்றும் சிலர், யார் யார் என விசாரித்து, அவர்கள் மீதும் உரிய வழக்குபதிந்து நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என நமது JEPAR பத்திரிகை சங்கத்தின் சார்பாகவும் பணிந்து கோரிக்கை வைக்கின்றோம்.

மேலும், இந்த ஆடியோவில் மகேந்திரனின் சிரிப்புகள் உயர் காவல் அதிகாரிகளுக்கு உரிய அர்த்தங்களை விளக்கும் என்றாலும், உயரதிகாரி களின் உரிய நடவடிக்கைகளே காவல்துறையின் களங்கங்களை துடைக்கும் என்பதுதான் உண்மை. (இணைப்பில் – ஆதாரமாக – ஆடியோ)

இனியாவது நடவடிக்கை பாயுமா?